உற்பத்தியான தானியத்தைக் கொண்டே ஆளுக்கு 13½ அவுன்ஸ் கொடுக்க முடியுமென்று
சென்னை மாகாண பொருளாதார ஆலோசகர் மு. நடராஜன் கூறுகிறார்.... நான்காண்
டுகளில் அன்னிய தேசங்களில் தானிய கொள்முதல் 600 கோடி ரூபாய்...! இப்போதான்
டு யுத்தத்தால் நம்மைவிட சீரழிந்திருந்த ஜெர்மன் பஞ்சமும் பற்றாக்குறையும்
பழங்கதை யினதாகி விட்டதென்று நேருவின் தூதர் பணிக்கர் கூறுகிறார்... நேரு
ஆட்சி வீரியமானதென்றால் பாகிஸ்தான் ஆட்சி கூட வீரியமானதென்று சொல்லலாம். ஹிந்து
சட்டத்தொகுப்பு மசோதாவை நிறைவேற்ற நேரமில்லை என்ற நேரு பத்திரிகை
மசோதாவை நிறைவேற்ற அவகாசம் இல்லை... ஹிந்து சட்டத் தொகுப்பு மசோ
தாவை சட்டசபையில் நிறைவேற்றாவிட்டால் ராஜிநாமா செய்வேன் என்று
மிரட்டிய நேரு வைதிகர்களின் கோரிக்கைக்கு பயந்து பெட்டிப் பாம்
பாக அடங்கிவிட்டார்... 300 பேர்கள் [illegible]. தி.மு.க. ஊழியர்கள் பழிவாங்
கப்பட்டனர்... 151ம் ஸெக்ஷன் ஆயிரம் நூற்றுக் கணக்கான தோழர்கள் சிறை ஊழியர்
கள் சிறைப்படுத்தி மாறு வேஷமாக ஒத்து தள்ளினர்... நாங்கள் (போர்) சேனை
வெளியேறிவிட்டால் இந்தியாவில் சாதிச் சண்டைகளும், வகுப்புக் கலவரங்களும் ஏற்பட்டு
அராஜகம் நிலவும், அன்னிய படையெடுப்புக்கு பாதை வகுக்கப்படும் என்றுதான்
சர்ச்சில் கூறினான்... இப்பொழுதும் அப்படித்தான் சொல்லுகிறான். ஜப்பானில் அராஜகம்
ஏற்படாமலிருக்க அமெரிக்க படைகள் இருக்க வேண்டுமென்று ட்ரூமன் கூறுகிறான்.
பசிபிக் மகா சமுத்திரம் அமெரிக்க ஏரியாக பாவிக்கிறதால் தான் ஆசியாவில்
குழப்பம் ஏற்படுவதைத் தடுக்கமுடியும் என்று மக் ஆர்தர் கூறுகிறான். ஆகவே தான்
இன்று நாங்கள் இந்த நாட்டை ஆளாவிட்டால் அராஜகம் ஏற்படுமென்கிறார்...
1936ல் உ. முத்துராமலிங்க தேவர் காங்கிரஸ் அபேட்சகராக நின்று ராமநாதபுரம்
ராஜாவை தோற்கடித்தார். இன்று தேவரை எதிர்த்து போட்டியிடுகிறார்; ராமநாதபுரம்
ராஜா காங்கிரஸ் அபேட்சகராகிவிட்டார்... தமிழ்நாட்டின் ஸவர்க்கார் டாக்டர்
வரதராஜுலு நாயுடு எனப்பெயர் பெற்றவர் இன்று காங்கிரஸ் அபேட்சகர்...
கோவில்கா, பார்லிமெண்ட் மாஜி பத்திரிகாசிரியரான K. சந்தானம்--- அரசியல்
பக்ஷேர்கி, அரசியல் வனவாசம் என்பவைகளுக்கு இலக்காய் புலவர் டாக்டர்
சுப்பராயன்—
தானியக் கொழுமையான தஞ்சை ஜில்லாவுக்கு வாய்த்திருக்கும் ஒன்பது கோடீ
நிலப்பிரபுத்துவம். லட்சம் ஏக்கரா நிலத்துக்கு அதிபதியாக விளங்கும் தருமபுரம்
மடாதிபதி வீற்றிருக்கும் ஜில்லா அது. நாற்பதினாயிரம் ஏக்கரா நிலத்துக்
கு நாட்டாண்மையாக விளங்கும் திருவாவடுதுறை மடாதிபதி வீற்றிருக்கும் ஜில்லா
அது. பன்னீராயிரம் ஏக்கரா நிலத்துக்கு பூபதியாக விளங்கும் சிங்காரச்சாமி
யான் கபிஸ்தலம் அது. பன்னிரண்டாயிரம் ஏக்கரா நிலத்துக்கு பட்டாவேந்
தராக விளங்கும் [illegible] ராசெந்தையார், ஐயாயிரம் ஏக்கரா நிலத்துக்கு
கோமானாக விளங்கும் பூண்டியார் குடும்பம், 5000 ஏக்கரா நிலத்துக்கு
கோவில் கட்டி வைத்திருக்கும் நெடும்பலம் சாமியப்பா குடும்பம், ஜேம்ஸ்
ஐயங்கார், கியாழி முதலியார், வாண்டையார் போன்ற பெரு நிலக்கிழார்கள் வாழும்
ஜில்லா அது. 100க்கு 75 வாசிப் பேர் விவசாயத் தொழிலாளர்கள். இவர்கள்
இன்று ராஜாஜியின் ஆட்சியின் கீழ் நடத்தப்படுகிறார்கள்.